திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, இதைக் கண்டு பிடித்த மாணவர்கள் பாராட்டப்பட்டதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். படிப்பு நேரங்களைத் தவிர மற்ற ஓய்வு நேரங்களில் இவ்விதமான நல்ல முறையில் நேரத்தை செலவிட இன்சென்டிவ் ஏதாவது பரிசாகக் கொடுக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆண்டு தோறும் பாலிடெக்னிக்கில் புதிய முறைகள் கண்டு பிடிப்பவர்களுக்கு இன் சென்டிவ் என்ற முறையில் பரிசுகள் வழங்கும் திட்டம் உள்ளது. இந்தப் பரிசு வழங்கப்பட்டதா வழங்கப்படுமா என்பதற்கான குறிப்புகள் இப்போது இல்லை. ஆண்டுதோறும் ஒரு பிராஜெக்ட், அதாவது டிரான்ஸ்மிட்டர் ஏ. சி. வோல்ட்டேஜ் என்ற அளவுக்கு ஒரு பிராஜெக்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே பாலிடெக்னிக் மாணவர்கள் பாட்டரியில் கார் ஓட்டமுடியும் என்று நிரூபித்துக் காட்டினார்கள். அவர்களுக்கு ஏற்கனவே பரிசுகள் வழங்கப் பட்டன. பெரிய அளவில் கமர்சியல் அடிப்படையில் செய்ய முடியுமா என்பதை மாணவர்களும், ஆசிரியர்களும் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மதுரை பாலிடெக்னிக்கின் மாணவர்கள் சிறப்பான ரிசர்ச் செய்திருக்கிறார்கள். இந்த மாணவர்களின் லிஸ்டை எடுத்து வேறு மாநிலத்திற்கு பயிற்சி பெறுவதற்கோ அல்லது அவர்களின் அனுபவத்தை தெரிவிப்பதற்கோ செல்லுவதற்கு அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவர்களுக்கும் தேவையான ஊக்கம் அளிக்கலாம். பாலிடெக்னிக் முதல்வர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அந்த வகையில் விண்ணப்பித்தால் அரசாங்கம் அந்த வகையில் ஊக்கம் அளிக்கும்.

தமிழ் சுருக்கெழுத்து ஆராய்ச்சி நிலையம்.

* 209 வினா—**திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு கல்வி-சுற்று லாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தமிழ் சுருக்கெழுத்து வளர்ச்சி ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைத்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

1975 நவம்பர் 6]

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, தமிழ் சுருக்கெழுத்து பற்றி ஆராய்ச்சி செய்யக்கூடிய குறிப்பு இல்லையென்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றையதினம் உலகம் பூராவும் சுருக்கெழுத்து வளர்ந்திருப்பது பிட்மென்ஸ் சுருக்கெழுத்து முறையின் ஆராய்ச்சியின் விளைவாகத்தான். அதாவது, பிரேசஸ், இடியம்ஸ், ஸ்பீட் கட்டிங், அட்வான்ஸ்ட் பிரேசாகிராபி கண்டுபிடித்ததன் விளைவாக ஒரு நிமிடத்திற்கு 200 வார்த்தை எழுதக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் எந்தவித ஆராய்ச்சியும் செய்யாததால் பழங்காலத்தில் இருப்பது போல் தமிழ் சுருக்கெழுத்தில் 80, 100 வார்த்தைகள் தான் எழுத முடிகிறது. ஆகவே உடனடியாக தமிழ்ச் சுருக்கெழுத்தில் ஆராய்ச்சி செய்வதற்காக அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்துவாரா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதுவரையில் அதற்கான செயற்குறிப்பு எதுவுமில்லை. ஆனால் தமிழ்ச் சுருக் கெழுத்து நூல் ஒன்று வெளியிடப்பட்டிருக்கிறது. அது மட்டு மல்ல. தமிழ் சுருக்கெழுத்து அகராதி, தமிழ் சொற்றொடர் அகராதி ஆகியவற்றைத் தயாரிக்கும் பொருட்டு தமிழ் வளர்ச்சி இயக்குநர் தலைமையில் ஒரு அறுவர் குழுவை அமைத்து, ஆராய்ந்து வருகிறது. தமிழ்ச் சுருக்கெழுத்து என்ற முறையில் தனி ஆராய்ச்சி நடத்துகிற நிலைமை ஏற்பட்டால் அதற்குத் தேவையான குறிப்புகளை மாண்புமிகு உறுப்பினர் தந்தால் அவை களை ஆராயலாம்.

திரு. எஸ். வடிவேல் : தமிழ்ச் சுருக்கெழுத்து ஆராய்ச்சி செய்வதோடு இன்றைக்கு நம் அரசின் மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு போன்ற பல குழுக்களின் அறிக்கைகள் தமிழில் அச்சிட்டுக் கொடுக்கப்படுவதில்லை. ஆங்கிலத்தில்தான் அச்சிட்டுக் கொடுக்கப்படுகின்றன. அம்மாதிரி கொடுக்காமல், தமிழ் அன்னையை முதற்படியில் வைத்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்களே. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது இந்தக் கேள்வியின் கீழ் வராது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தமிழ்ச் சுருக்கெழுத்து வளர்ச்சி அடைவதற்குத் தேவையான பயிற்சியாளர்கள் இல்லை

யென்று சொல்லப்படுகிறதே, உண்மையா? தேவையான பயிற்சியாளர்களை உருவாக்க அரசாங்கம் தனி முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்புகள் இல்லை. தனியார் துறைகளில் பல்வேறு இடங்களில் இந்தப் பயிற்சி தருவதற்கு நிறுவனங்கள் இருக்கின்றன. அரசாங்க அலுவலர்கள் அதிகாரிகள் போன்றவர்களுக்குப் பயிற்சி அளிக்க சிலபல முறைகள் இருக்கின்றன.

திரு. ஏ. எம் இராஜா: தமிழ்ச் சுருக்கெழுத்து வளர்ச்சிக்கு இது வரையிலும் எந்தக் கமிட்டியும் போடப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அரசாங்கத்தின் சார்பில் முயற்சி மேற்கொள்ளப்படாவிட்டால் இது வேகமாக வளர்ச்சியுருது. எனவே சுருக்கெழுத்தில் பயிற்சி பெற்றவர்கள், திறமையுள்ளவர்கள் இவர்களை எல்லாம் வைத்து ஒரு கமிட்டி போட்டு அதன் மூலம் 2 அல்லது 3 ஆண்டு காலத்திற்குள் தமிழ் சுருக்கெழுத்தில் ஒரு டைரக்டரி, பாடப் புத்தகம் தயார் செய்வதற்கு அரசு முன் வருமா? அந்தக் கமிட்டி போடும்போது நம்முடைய உறுப்பினர் வீராசாமி தமிழ் சுருக்கெழுத்தில் உயர்நிலை ஹையர் பாஸ் செய்திருக்கிருர்கள். இதுபோல் சட்டப் பேரவைத் துறையிலும் வேறு சிலர் பாஸ் செய்திருக்கிருர்கள் என்று நினைக்கிறேன். அவர்களையெல்லாம் அந்தக் கமிட்டியில் போட்டு அரசு அமைக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: முதலிலே குறிப்பிட்டேன், அதற்கான பாடப்புத்தகம் இருக்கிறதென்று. அச்சிடப்பட்டு 5 ஆயிரம் பிரதிகள் வெளிடப்பட்டிருக்கின்றன. மீண்டும் அச்சிடுவதற்கும். அகராதிகள் தயாரிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு வீராசாமி தெரிவித்தது போல் தமிழ்ச் சுருக்கெழுத்து ஆராய்ச்சி செய்வதற்கு ஒரு தனி அமைப்பு ஏற்படுத்த முடியுமா என்பது பற்றி செயற்குறிப்பு இல்லையென்று குறிப்பிட்டேன். ஆராய்ச்சி செய்ய வழிவகைகள் இருக்கின்றன. வேறு பல மொழிகளில் ஆராய்ச்சி செய்து சிறந்த பலன்கள் ஏற்பட்டுள்ளன என்று குறிப்பிட்டார்கள். அது பற்றி குறிப்புகள் தந்தால் அது பற்றி ஆராயலாம் என்று குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் வீராசாமியை அந்தக்

1975 நவம்பர் 6]

கமிட்டியில் இடம் பெற வைப்பது பற்றி மாண்புமிகு திரு. ராஜா சிபாரிசு செய்து தான் போட வேண்டிய அவசியம் இல்லை. திரு. வீராசாமி அவர்கள் இங்கு இருப்பதால் அவர்களே வேண்டுகோள் விடுக்கலாம்.

கலைமாமணி பட்டம் பெற்றவர்கள்.

* 210 வினா—**திரு. கா. வேழவேந்தன்** : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் மூலம் 'கலைமாமணி' பட்டம் பெறுவோர்க்கு ரொக்கப்பரிசு வழங்கும் திட்டம் அமுல்படுத்தப்படுகின்றதா?

(இ) ஆம் எனில், இதுவரை அப்படி வழங்கப்பட்டவர்களின் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இதுவரை கீழ்க்கண்ட பத்து பேர்களுக்கு வழங்கப் பட்டுள்ளது. அவர்களின் பெயர்கள் :—

1. திருமதி எம். எஸ். திரௌபதி (நடிகை)
2. திரு. நாரண துரைக்கண்ணன் (நாடக ஆசிரியர்)
3. திருமதி எஸ். ஆர். ஜானகி (நாடக நடிகை)
4. திரு. டி. என். சுப்ரமணிய பாகவதர் (ஹரிகதா வித்வான்)
5. திரு. மன்னார்குடி நடேசபிள்ளை (மோர்சிங்)
6. திரு. இராகவ வாத்தியார் (மதுரை) (நாடக பாடலாசிரியர்)
7. திரு. ஓ. என். கிட்டு (நாடக நடிகர்)
8. திரு. சிவஞான பாண்டியன் (தெருக்கூத்து)
9. திரு. பி. ஐ. நடேசபிள்ளை (சென்னை நாதசுர வித்வான்)
10. திரு. சி. தங்கையா (செல்வல்குளம், வில்லுப்பாட்டு)

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, நலிந்திருக்கிற கலைஞர்களுக்கு கலைமாமணி பட்டத்தோடு ரொக்கப் பரிசு கொடுத்த வகையில் பத்துப் பெயர்களை அமைச்சர் அவர்கள்